# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 50/2020 | அரசு தரப்பு | அ.சா.1 |
| பெயர் | முருகைய்யன் | தாலூக்கா | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 8th day of July 2025.

( எதிரி ஷோபா என்கிற சவிதா ஸ்ரீமதி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் வனக்காப்பாளராக பணியில் இருந்து 30-04-2020 அன்று ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் நான் வனத்துறையில் வனக்காவலராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்தேன். கடந்த 10-03-2020 அன்று ஆணைகட்டி வன சோதனை சாவடியில் நான் மற்றும் வனக்காப்பாளர் சுப்பிரமணியம் இருவரும் பணிபுரிந்து வந்தோம். கடந்த 11-03-2020 ஆம் தேதி அதிகாலை 12.30 மணி அளவில் கியூ பிரான்ஞ் போலீசார் நான் பணிபுரிந்து வந்த ஆணைகட்டி வன சோதனை சாவடிக்கு வந்தார்கள். கியூ பிரான்ஞ் போலீசார் சுமார் 10 பேர் இருந்தார்கள். கியூ பிரான்ஞ் இன்ஸ்பெக்டர் அவருடைய அடையாள அட்டையை எங்களிடம் காண்பித்தார். கியூ பிரான்ஞ் போலீசார் சோதனை சாவடியில் வாகனங்கள் தணிக்கை செய்ய வேண்டுமென்றும், அதற்கு எங்களை உடந்தையாக இருக்குமாறும் கேட்டுக் கொண்டார்கள். அதிகாலை சுமார் 5.30 மணி அளவில் ஆணைகட்டியிலிருந்து டி.என்.33 N.2972 என்ற அரசு பேரூந்து வந்தது. அப்பொழுது பேரூந்தில் கியூ பிரான்ஞ் போலீசார் மற்றும் நாங்கள் இருவரும்

சோதனை செய்ய முற்பட்டபோது வெளிர் சந்தன நிற பை வைத்திருந்த ஒரு பெண் அவசரமாக கீழே இறங்கினார். அந்த பெண்ணைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ஆஜர் எதிரிதான் மேலே குறிப்பிட்ட பேரூந்தில் இருந்து அவசரமாக இறங்கினார். உடனே பெண் போலீசார் ஒருவர் அவரை விசாரிப்பதற்கு அழைத்தனர். ஆஜர் எதிரியை கியூ பிரான்ஞ் போலீசார் விசாரணை செய்தபொழுது அவர் சி.பி.ஐ மாவோயிஸ்ட் இயக்கத்தில் தான் இருப்பதாக கூறினார். மாவோயிஸ்ட் பணி சம்மந்தமாக தான் ஆணைகட்டியிலிருந்து கர்நாடகாவிற்கு செல்வதற்கு கூறினார். ஆஜர் எதிரியிடம் விசாரணை செய்து கியூ பிரான்ஞ் ஆய்வாளர் வாக்குமூலம் பெற்றார். அந்த வாக்குமூலத்தில் எங்களை சாட்சியாக இருக்குமாறு கியூ பிரான்ஞ் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாங்கள் எங்கள் உயர் அதிகாரிகளிடம் செல்போன்மூலம் தகவல் கொடுத்து அனுமதி பெற்ற சாட்சி கையொப்பம் செய்தோம். சுமார் 5.30 மணியிலிருந்து 6 மணி வரை அந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. ஆஜர் எதிரி பையில் வைத்திருந்த பொருட்களை சோதனை செய்தார்கள். அந்த பையில் போன் ஒன்று, மெம்மரிகார்டு, சிம்கார்டு, மூன்று புத்தகங்கள், 500 ரூபாய் நோட்டு, ஒரு கவர் இருந்தது. மேற்சொன்ன பொருட்கள் மற்றும் வெளிர்நிற சந்தன பை ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் எங்கள் இருவர் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அதில் நானும், மேற்கண்ட சப்பிரமணியனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசர்தான் அந்த இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாகும். அதில் முதலாவதாக காணப்படுவது எனது கையொப்பம் ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றிய பொருட்களைப் பார்த்தால் என்னால் அடையாளம்

காட்ட முடியும். சாட்சி கீழ்க்கண்ட பொருட்களை சரியாக அடையாளம் காட்டினார். அதனால் அந்த பொருட்கள் கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது.

செல்போன் சா.பொ.1

மெம்மரிகார்டு சா.பொ.2

சிம்கார்டு சா.பொ.3

மூன்று புத்தகங்கள் சா.பொ.4 முதல் 6

500 ரூபாய் நோட்டு சா.பொ.7

ஒரு கவர் சா.பொ.8

வெளிர்நிற சந்தன பை சா.பொ.9

இது சம்மந்தமாக என்னை கியூ பிரான்ஞ் டி.எஸ்.பி என்னை விசாரித்தார்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எங்களுக்கு வேலை நேரம் உள்ளது. காலை **8** மணிக்கு பணிக்கு வந்தால் மறுநாள் **8** மணிக்கு வீட்டிற்குச் செல்வோம். இந்த வழக்கு சம்பவத்தன்று சோதனை நடைபெற்றதால் பணிநேரம் முடிந்தும் கியூ பிரான்ஞ் போலீசாருக்கு உதவி செய்யும்வரை எங்களை பணியில் தொடர சொன்னதன் அடிப்படையில் பணியில் தொடர்ந்து இருந்தோம். எங்களுக்கு வருகை பதிவேடும் உள்ளது. பணிக்கு வந்தவுடன் வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்வோம். ஆணைகட்டி பகுதியில் வனசோதனை சாவடி இல்லாமல் போலீஸ் சோதனை சாவடியும் உள்ளது என்று சொன்னால், நான் பணியில் இருந்த சமயத்தில் வனசோதனை சாவடி மட்டும்தான் இருந்தது. ஆணைகட்டி பகுதியில் போலீசார் சோதனை சாவடியும் இருந்தது என்று சொன்னால் சரியல்ல, மாங்கரையில் இருந்தது. ஆணைகட்டி சோதனை சாவடியிலிருந்து மாங்கரை போலீசார் சோதனை சாவடி சுமார் 9 கி.மீ

இடைவெளியில் உள்ளது. சோதனை சாவடியில் வன பொருட்களை யாரேனும் எடுத்துச் செல்கிறார்களா என்பதை சோதனை செய்வதுதான் எங்கள் பணி என்று சொன்னால் சரிதான். அதற்காக ஒரு பதிவேடும் நாங்கள் பராமரித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். அந்த பதிவேட்டில் அசாதாரணமான ஒரு நிகழ்வு நடந்தால் அதைப் பதிவு செய்யவேண்டும் என்று சொன்னால் சரிதான். எங்களை வேறு ஒரு துறையைச் சேர்ந்தவர்கள் அவர்கள் வழக்கு சம்மந்தமாக எங்களது உதவியை கேட்டால் அது சம்மந்தமாகவும் மேற்சொன்ன பதிவேட்டில் நாங்கள் பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால் சரிதான். எங்கள் உயர் அதிகாரியின் வாய்மொழி உத்திரவை நாங்கள் பெற்றால் அதையும் அந்த பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால், அவ்வாறான வழக்கம் இல்லை. கியூ பிரான்ஞ் போலீசார் எங்களிடம் கேட்டதை அந்த பதிவேட்டில் பதிவு செய்து வைத்துள்ளோம். சோதனை சாவடிக்கு அருகில் எங்களது குடியிருப்புகள் உள்ளது. ஒரு டீக்கடையும் உள்ளது. பேரூந்தில் எதிரி குறிப்பாக எந்த இடத்தில் அமர்ந்திருந்தார் என்று என்னுடைய வாக்குமூலத்தில் நான் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சோதனையின்பொழுது பொதுவாக பொருட்களை எடுத்து பிரித்து பார்ப்பது வழக்கம் என்றால் சரிதான். பெண் போலீசார் ஒருவர் எதிரி வைத்திருந்த பையில் இருந்த பொருட்களை சோதனை செய்து பார்த்துவிட்டு பின்னர் கியூ பிரான்ஞ் ஆய்வாளர் அந்த பொருட்களை சோதனை செய்தார். அந்த பொருட்களை பெண் போலீசாரிடம் வைத்திருக்க சொன்னார்கள். ஆய்வாளர் பேரூந்தில் இருந்த மற்ற பயணிகளை அழைக்கவில்லை. பேரூந்து எங்கள் சோதனை சாவடியில் சுமார் 2 அல்லது 3 நிமிடங்கள் நின்றது. ஆஜர் எதிரியை சம்பவத்தன்று பார்த்ததற்கு பின்னர் இன்றுதான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன். அதற்கு முன் அவரை நான்

பார்த்ததில்லை. அடையாள அணிவகுப்பு நடத்தி ஆஜர் எதிரியை அடையாளம் காட்டச்சொல்லி என்னை யாரும் அழைக்கவில்லை. எதிரியை சம்பவத்தன்று இறங்கும்போது நான் பார்த்தேன். அதை வைத்துதான் சாட்சியம் அளிக்கிறேன். எங்கள் சோதனை சாவடியில் சி.சி.டிவி இல்லை. எங்கள் சோதனை சாவடியில் உள்ள பதிவேட்டை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக சோதனை நடந்து கொண்டிருந்தபொழுது அந்த வழியில் வாகனங்கள் வந்து சென்று கொண்டுதான் இருந்தது. அவ்வாறு வந்த வாகனங்களையும் நாங்கள் சோதனை செய்து கொண்டுதான் இருந்தோம். நான் சொன்னநேரத்தில், சொன்ன விதத்தில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. டி.எஸ்.பி என்னை விசாரணை செய்தபொழுது ஆய்வாளர் அடையாள அட்டையை என்னிடம் காண்பித்ததை நான் வாக்குமூலத்தில் கூறினேனா என்று எனக்கு தற்பொழுது ஞாபகமில்லை. டி.எஸ்.பி விசாரணை செய்தபொழுது ஆய்வாளர் வாகன தணிக்கை சமயத்தில் எங்களை உதவியாக இருக்குமாறு அழைத்ததைப்பற்றி கூறியுள்ளேன். நானும் சோதனை செய்ய பேரூந்தில் ஏறிய விஷயத்தை ஆய்வாளரிடம் கூறினேனா என்று தற்போது எனக்கு நினைவில்லை. 5.30 மணியிலிருந்து 6 மணிக்குள் சோதனை நடந்த விவரத்தை டி.எஸ்.பி விசாரணையின்பொழுது நான் கூறியுள்ளேன். சோதனையின்பொழுது எனது உயர் அதிகாரிகளிடம் செல்போன் மூலம் உத்திரவு பெற்ற விவரத்தை டி.எஸ்.பி விசாரணையின்பொழுது நான் கூறியுள்ளேன். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலத்தையும் கொடுக்கவுமில்லை, அதை பதிவு செய்யவுமில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியிடமிருந்து எவ்வித பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றிய பொருட்களை சோதனை சாவடியில் வைத்து சீல் செய்தார்களா என்று எனக்கு

ஞாபகமில்லை. மேலே குறியீடு செய்யப்பட்ட வழக்கு சொத்துக்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவல் துறை கேட்டுக் கொண்டதற்கிணங்க நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/முருகையன்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.